அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*
கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research


## EDITORIAL BOARD


**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வெளவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கனினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# நுண்கலைகள்

# *The Role Of The Four Types of Virutham in Bharathanatyam*

***Dr.Thakshayiny Paramadevan,*** *Senior Lecturer, Department of Dance,Drama& Theater Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University Srilanka.*

***Abstract***

*The word vrti is derived from Sanskrit word' vrtha It means to practice and practice. It is an action; it is used to take a complete decision, in which many different kinds of sins are committed. These are of three kinds: Artha-mi and Kama-dharma. If development does not have the character of drama then it is also called 'mother of drama'. It includes the senses of speech, speech, emotion, and sin. These are derived from the four Vedas. These are of four types*

*1. Bharati Vritti - Oral Discourse - Rig Veda*

*2.SatvatiVritti-ManoDharma-YasurVeda*

*3.Vai-pagivritti-kindness,affection-SamaVeda*

*4.AratiVritti-Body,Exercise-AtharvanaVeda*

*Lord Vishnu filled the whole world with water and was lying on a snake bed. At that moment, two demons named Madhukai and Dabur showed their strength and power and came to fight with the Lord. They realized their pride and met the Lord through His Word. It is also known as Bharathi Vriddhi. Then as she lifted her thick black curls upwards, the radiance of divine energy emanating from it came through what is known as sattvati vritti. The development of the hand from graceful movements and the development of the Arapadi from the strange karanas with various forms of movements. Thus Brahma created the Vritti to suit every function of Tirumal.*

***Keywords*** *: Arthami,mother of Drama,kama,Dharma,Abinayam,bhavam*

## பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு

**கலாநிதி தாக்ஷயினி பரமதேவன்,** சிரேஸ்ட விரிவுரையாளர், நடன நாடகத் துறை, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.இலங்கை

**ஆய்வுச்சுருக்கம்**

விருத்தி என்ற சொல் சமஸ்கிருத வார்த்தையான "வருக" என்ற சொல்லிலிருந்து வந்ததாகும்;. இதன் அர்த்தம் பழகுதல், செய்து காண்பிதல், எனப் பொருள்படும். இது ஒரு செயலில்; முழுமையான முடிவை எடுப்பதற்கு பயன்படுகிறது இதில் பல வித்தியாசமான பாவம்ஃபாணி ஏற்படுகின்றது. இவை அர்த்தமி, காமா தர்மம் என்ற மூன்று விதமான செயற்பாடுகளை கொண்டவை. விருத்தி நாடகத்தின் தன்மையை கொண்டிருப்பாதால்

இதனை "நாடகத்தின் தாய்" என்றும் கூறுவர்.இதனுள் ரசம் , பாவம் , அபிநயம், பேச்சு ஆகிய அம்சங்கள் அடங்கியுள்ளது.இவை நான்கு வேதங்களில் இருந்து தோன்றியதாகும்.இவை நான்கு வகைப்படும்.

1. பாரதி விருத்தி — வாய்மொழிப்பேச்சு - ரிக் வேதம்

2. சாத்வதி விருத்தி — மனோ தர்மம் - யசூர் வேதம்

3. வை~pகி விருத்தி — கருணை , பாசம் - சாம வேதம்

4. ஆரபடி விருத்தி — சரீரம் , உடற்பயிற்சி — அதர்வண வேதம்

விஷ்ணு பகவான் இந்த அகில உலகத்தையும் நீரால் நிரப்பி பாம்பினால் ஆன மெத்தையில் படுத்துக்கொண்டு இருந்தார். அந்த தருணத்தில் இரண்டு அசுரர்களாகிய மதுகை , டபர்கள் என்ற அரக்கர்கள் அவர்களது பலத்தையும் , சக்தியையும் காட்டி இறைவனிடம் சண்டையிட வந்தனர். அவர்கள்pன் அகந்தையை உணர்த்தி இறைவன் தனது வார்த்தையின் வழியாக சந்தித்தார். இதைப் பாரதி விருத்தி என்றும் அழைப்பர். பின் தன் அடர்ந்த கருங்கூந்தலை மேல் நோக்கி உயர்த்தியபோது அதனின்று வெளிப்பட்ட தெய்வீக சக்தியின் பிரகாசத்தின் வழியாக வந்தது சாத்வதி விருத்தி எனப்படும். அழகு மிக்க அசைவுகளில் இருந்து கை~pகி விருத்தியும் பலவகை நடை பிரயோகங்களுடன் கூடிய விசித்திரமான கரணங்களைக் கொண்ட மற்போரினால் ஆரபாடி விருத்தியும் தோன்றியது. இவ்வாறாக திருமாலின் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் ஏற்றவாறு பிரம்மா விருத்தியை தோற்றுவித்தார்.

**திறவுச் சொற்கள் :** அர்த்தமி, நாடகத்தின் தாய், காமா, தர்மம் ,அபிநயம், ரசம் ,பாவம்

**முன்னுரை**

விருத்தி எனும் சொல்லிற்கு செயல், தொழில் என்பன பொருளாக கொள்ளப்படுகின்றது. "சொல், மனம், செயல் என்ற மூன்றும் இணைந்த செயற்பாடானது விருத்தி எனப்படுகிறது. பொதுவாக இவை உலகத்தில் உள்ள உணர்ச்சிகளின் வேகத்தைக் கொண்டு காணப்படுகிறது. ஆனால் காப்பியத்தை உற்று நோக்குகின்ற போது ஆசிரியருக்கும், நாடகத்தை காண்போருக்கும் உண்டாகும் உணர்ச்சியானது உலக வழக்கிற்கு மாறுபட்டதாக காணப்படுகிறது.

நான்முகனால் வகுக்கப்பட்ட நாட்டிய சாஸ்திரமானது இந்து மதத்தில் ஐந்தாவது வேதமாக காணப்படுகிறது. அதாவது நான்முகனாகிய பிரம்மா "ரிக்" வேதமாகிய இருக்கு வேதத்தில் இருந்து வசனமும், யசூர் வேதத்திலிருந்து அபிநயத்தினையும், சாம வேதத்திலிருந்து கீதத்தினையும், அதர்வண வேதத்திலிருந்து ரஸத்தையும் ஒன்றுதிரட்டி இவ்வைந்து விடயங்களையும் தன்னிடத்திலே முழுமையாகக் கொண்டிருக்கும் வகையிலே ஐந்தாவது வேதமாகிய நாட்டிய சாஸ்திரத்தை வகுத்தார் என்பது நாட்டிய வரலாறு ஆகும்.

இதே வகையில் விருத்தி நிலைப்பாடுகளும் கூட நால்வகை வேதங்களில் இருந்து நால்வகை விருத்திகள் வரைந்தெடுக்கப்பட்டதாக நாட்டிய சாஸ்திரம் பறைசாற்றுகின்றது. அதாவது ரிக் வேதத்தில் இருந்து பாரதி விருத்தி ஆகிய வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தும் நிலைப்பாடும், சாம வேதத்திலிருந்து கைசிகிவிருத்தி ஆகிய நளின, எளிய நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் விருத்தியின் முறைப்பாடும், அதர்வண வேதத்திலிருந்து ஆரப்பாடிவிருத்தியின் நிலைப்பாடான திடமான, ஸ்த்திரமான, கடினமான, கம்பீரமான, அழுத்த திருத்த

நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் விருத்தியின் அம்சங்களையும், யசூர் வேதத்திலிருந்து மனித மனோகர்ம உணர்வுகளுடன் பின்னிப் பிணைந்த சாத்வீக அபிநயத்தை அடிப்படையாகக் கொண்ட சாத்வதி விருத்தியின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வகையில் இவை யாவும் நால்வகை வேதங்களில் இருந்து வகுக்கப்பட்ட விருத்தி முறைகள் ஆகும். அந்த வகையில் விருத்திகளானது நான்கு வகைப்படும். அவையாவன,

01. பாரதி விருத்தி

02. சாத்வதி விருத்தி

03. கைசிகி விருத்தி

04. ஆரபாடி விருத்தி என்பனவாகும்.

இதனை விட தசரூபம் எனும் நூலிலே “தலைவன் செய்யலாம் விருத்தி நான்காம்” என்ற பாடலடியில் தலைவனுடைய செயல்கள் தான் விருத்தி எனவும் அவை கைசிகி, சாத்வதி, ஆரபாடி, பாரதி என நான்கு வகைப்படும் என நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து விருத்தி தோன்றிய வரலாறு பற்றி நோக்குவோம்.

**விருத்திகள் தோன்றிய வரலாறு**

விருத்திகள் தோன்றிய வரலாறு என்று பார்க்கின்ற போது திருமால் ஆனவர் உலகங்களை தன்னுள் மறைத்துக் கொண்டு பாம்பணை மேல் படுத்திருந்தார் அவ்வேளை மதுகை,டபர்கள் எனும் அரக்கர்கள் அவரைத் தாக்கி போர் தொடுக்க ஆரம்பித்தனர். அச்சந்தர்ப்பத்தில் திருமாலுக்கும், அரக்கர்களுக்கும் இடையில் சினம், வீரம் பொங்கும் உரையாடல்கள் தோற்றம் பெற்றன. அவ் உரையாடல்களே பாரதி விருத்தி தோன்ற காரணமாக அமைந்தது. அதனை தொடர்ந்து அச்சந்தர்ப்பத்திலேயே திருமால் தூய்மையான விசாலமற்ற அங்காஹாரங்களுடன் போர் செய்தார் அப்போரின் போது திருமால் தரையை நோக்கி வேகமாக அடி வைத்து நடந்ததால் நில மகளுக்கு பாரம் (பளு) அதிகமானது அதனால் அவ்வுரையாடல் பாரதி விருத்தி எனப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அந்த அரக்கர்களுடன் திருமாலுக்கு நடந்த போராட்டத்திலே தடுமாற்றம் இல்லாத, தீவிரமல்லாத சத்துவம் (மனத்தின் நிலையை) முக்கியமாகக் கொண்ட சாத்வதி எனும் விருத்தி சார்ரங்கம் எனும் திருமாலின் வில்லினுடைய நாண் அசைவின் ஒலியால் தோன்றியது.

மேலும் விசித்திரமான அங்கஹாரங்களை காட்டிக்கொண்டு திருமால் அவருடைய அவிழ்ந்த தலை முடியை கவினுலும், சே~;டைகளும் கொண்டு முடிந்து கொண்டார். அந்த அழகுமிக்க அசைவுகளில் இருந்து கைசிகி எனும் விருத்தி தோன்றியது. அந்த அரக்கர்களுடன் நடந்த விரைவும், உணர்வும் மிகுந்த பலவகை நடை (சாரி பேதம்) பிரயோகங்களுடன் கூடிய விசித்திர கரணங்களை கொண்ட மற்போரினால் ஆரபாடி எனும் விருத்தி தோன்றியது. இவ்வாறாக திருமாலின் செயற்பாடுகளால் அந்தந்த பொருட்களுக்கு ஏற்றபடி விருத்திகளின் இலக்கணத்தை பிரம்மா தோற்றுவித்தார்.

அதாவது திருமாலின் உரையாடல் முறையைச் சார்ந்து பாரதி விருத்தியும் அவரின் மனதின் உணர்ச்சிகளை சார்ந்து “சாத்வதி விருத்தியும்”, அவரின் செய்கையை சார்ந்ததாக கைசிகி

விருத்தியும் , திருமால் போர் செய்த முறையை சார்ந்ததாக ஆரபாடி விருத்தியும் தோற்றம் பெற்றன.

அதனைத் தொடர்ந்து பிரம்மா திருமாலை நோக்கி விசித்திரமான தன்மையை கொண்டதாகவும், பலவகை மாறுபாடுகளுடன் கூடிய வகையிலும் தாங்கள் போர் செய்த முறைகளே எல்லா வகையான போர் முறைகளுக்கும் இலக்கணமாக விளங்கும் என விண்ணப்பம் செய்வதாக கூறப்படுகிறது. விருத்தி என்ற செயலுக்கு வர்த்தனம், இருக்கை என்பது பொருளாகும். காப்பியங்களில் அந்த நிகழ்ச்சிகள், அவைகள் என்பவற்றிற்கு ஏற்ப சொற்றொடர்கள் அமைக்கப்பட்டுள்ள முறையானது விருத்தி எனப்படுகிறது.

திருமால் அரக்கர்களுடன் நடந்த போரில் அவர் நடை போட்ட முறையானது "தியாயம்" என்ற பெயரில் காப்பியங்களுக்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்தன. இந்தத் திருமாலின் நடைகளில் உள்ள மாறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு அவை கருத்துக்களுக்கு ஏற்ப பிரம்மா தன் உரையாடலைக் கொண்டு திருமாலை துதித்த முறையானது அந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப காப்பிய நடையானது அமைவதற்கு இலக்கணமாக உருப்பெற்றது. பரதர் முதலான நாட்டிய அறிஞர்கள் தமது நாட்டியத்தில் முறைகளை பயன்படுத்தினர். இவ்வாறாக விருத்திகளின் தோற்ற வரலாறானது காணப்படுகின்றது என பரத முனிவர் அவருடைய நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். இனி தொடர்ந்து நால்வகை விருத்திகளினதும் இலக்கணங்களை விரிவாக நோக்கலாம்.

**விருத்திகளின் வகைப்பாடு**

பாரதி விருத்தி

சிறப்பான உரையாடல்களை தன்னகத்தே கொண்டதாக காணப்படுவது பாரதி விருத்தி ஆகும். இவ்விருத்தியை பயன்படுத்தக்கூடிய திறமை வாய்ந்தவர்கள் ஆண்களே என்றும் இதனைப் பெண்கள் செயலாற்ற கூடாது என்றும் சொல்கின்ற அதே வேளையில் நாடகங்களில் ஆண்களுக்குரிய உரையாடல் வடமொழியிலும், பெண்களுக்குரிய உரையாடல்கள் பிராக்கிருத மொழியிலும் இடம்பெற வேண்டும் எனக் கூறப்படுகிறது. பெண்கள் வடமொழியை உரையாடலுக்கு பயன்படுத்தக் கூடாது. ஆகையால் பரதர்கள் பயன்படுத்துவது என்பதன் காரணமாக பாரதி விருத்தி என பெயர் பெற்றது. பாரதி விருத்தியானது நான்கு வகைப்படும். அவையாவன,

i. பிரரோசனை

ii. ஆமுகம்

iii. வீதி

iv. பிரஹஸனம் என்பனவாகும்.

- பிரரோசனை எனப்படுவது வெற்றியையும், வளமையையும் குறிப்பிடுவதும் பாவங்களைப் போக்குவதும் மங்களங்களை தரவல்லதும் ஆகும். இப்பிரரோசனையானது பூர்வாங்கத்தில் பயன்படுத்தப்படுகிறது.

- ஆமுகம் நாடி, விதூஸகன், பாரி பார்சிவிகன் என்பவர்களில் ஒருவருக்கும், சூத்திரதாரனுக்கும் இடையில் நிகழும் நாடகத்திற்குரியதுமான விசித்திரமான

உரையாடல்களுடனும், வீதி உறுப்புகளுடனும், தெளிவான கேள்வி விடைகளுடனும் செய்யும் உரையாடல் ஆமுகம் எனப்படும். முகசந்தி வரை இருப்பதும். கதையின் ஆரம்பத்தில் ஒரு சிறு பகுதியை குறிப்பிடுவதும் ஆகையால் இதற்கு ஆமுகம் என பெயர் உருவாகிற்று. இதற்கு பிரஸ்சதாவனை என்ற பெயரும் உண்டு.

இந்த ஆமுகமானது ஐவகையான பிரிவுகளை தனது உறுப்புகளாக கொண்டுள்ளது. அவை வருமாறு,

*i.* உத்காத்யகம்

*ii.* ததோத்காதம்

*iii.* பிரயோகாதிசயம்

*iv.* பிரவிருத்தம்

*v.* அவலகிதம் என்பனவாகும்.

இவை ஒவ்வொன்றினதும் இலக்கணங்கள் பின்வருமாறு,

*i.* உத்காத்யகம்

ஆதரவு அளிக்கும் வகையில் கேள்வியாக கேட்கப்படும் சொற்களுக்கு ஏற்ப விடையளிக்கும் முறை உத்காத்யகம் எனப்படும்.

*ii.* ததோத்காதம்

சூத்திரகாரன் கூறிய சொற்றொடரையோ அதன் பொருளையோ பின்பற்றியதாக பாத்திரமானது அரங்கிற்குள் பிரவேசம் செய்தல் ததோத்காதம் எனப்படுகிறது.

*iii.* பிரயோகாதிசயம்

நாட்டியத்திற்குரிய பொருளை சூத்திரதாரன் பிரஸ்தாபனையில் பிரயோகம் செய்ய அதை பின்பற்றியதாக பாத்திரமானது அரங்கிற்குள் வருவதானது பிரயோகாதிசயம் எனப்படுகிறது.

*iv.* பிரவிருத்தம்

சூத்திரதாரன் ஏதாவது ஒரு பருவத்தை (காலை) சார்ந்து காணப்படுகின்ற நாடகப் பொருள் தோன்றும் வண்ணம் வர்ணனை செய்ய அதைச் சார்ந்ததாக பாத்திரமானது அரங்கிற்குள் வருவது பிரவிருத்தம் எனப்படுகிறது.

*v.* அவலகிதம்

கேள்வி ஒரு விடயத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்ற அதே சந்தர்ப்பத்தில் அளிக்கப்படுகின்ற விடையானது வேறொரு விடயத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்படுவது அவலகிதம் எனப்படும்.

கதைப் பொருளுக்கு ஏற்றபடி இவற்றில் ஏதேனும் ஒரு விடயத்தை பிரஸ்தாவனையில் கருத்துச் செறிவுடன் பயன்படுத்த வேண்டும். பிரஸ்தாவனையில் பாத்திரங்கள் அதிக எண்ணிக்கை கொண்டதாக காணப்படக் கூடாது. உத்தி பிரயுக்தியாக (வினா விடை போன்ற உரையாடல்) கதையைப் பற்றிய விடயத்தை நன்கு விளக்க வேண்டும். இதன் அடிப்படையில்

பிரஸ்தாவனை பல வகையாக கையாளப்படுகின்றது. இவ்வாறாக பாரதி விருத்தி பற்றி நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பாரதி விருத்தி பற்றி மதங்கசூளாமணி என்னும் நூலிலே பாரதி விருத்தியானது அசுரரைக் கொல்ல அமரராடின பதினொராடலும் பிறவும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப் பதினொரு வகை ஆடலாவன,

"கடையமயி ராணிமரக் கால்வித்தை கந்தன்

குடைதுடிமா லல்லியமற் கும்பஞ் - சுடர்விழியாற்

பட்டமதன் பேடுதிருப் பவையரன் பாண்டரங்கக்

கொட்டியிவை காண்பதினோர் கூத்து" எனக் கூறப்படுகிறது.

அதாவது அசுரர்களை அழிவடையச் செய்யும் வண்ணம் தேவர்கள் ஆடிய பதினொரு வகை ஆடல்களும் பாரதி விருத்தி எனவும், இது தெய்வீக விருத்தி எனவும் மதங்கசூளாமணி கூறுகின்றது. இதனை விட பாரதி விருத்தி பற்றி "தசரூபகம்" எனும் நூலிலே பின்வருமாறு கூறப்படுகின்றது.

"செஞ்சொல் மிகுந்த நடனுரை பாரதி

பிரரோ சனையொடு வீதி யாமுகம்

பிரக சனமென நான்கதனங்கம்"

இதன் கருத்து யாதெனில் வடமொழியினை மிகுதியாகக் கொண்ட நடனத்தின் உரை பாரதி விருத்தி என்றும் பிரரோசனை, வீதி, ஆமுகம், பிரகஸனம் என்பன இதன் நால்வகை உறுப்புக்கள் ஆகும். தொடர்ந்து இந்நூலிலே பிரரோசனை பற்றி பின்வரும் பாடலடி குறிப்பிடுகின்றது.

"பெரும்புகழ் கூறிய வாவினை யூக்கல்

பிரரோ சனையெனப் பகர்த லாகும்"

அதாவது நடித்து காண்பிக்கப் போகும் பொருள் முதலியவற்றைப் புகழ்ந்து கூறி கேட்போரின் விருப்பத்தை மிகுவித்தல் பிரரோசனை ஆகும் என குறிப்பிடப்படுகின்றது. தொடர்ந்து ஆமுகத்தின் உறுப்புகள் பற்றி நாட்டிய சாஸ்திரத்தில் கூறிய விடயங்களே அவற்றின் பாடல் அடிகள் வருமாறு,

- கதோத்காதம்

"தன்னுடைய சரிதை கொத்துள தாய

முன்னைய சூத்திர சொற்பொருள் ளொன்றைப்

பற்றி யரங்கில் பாத்திரம் தோன்றல்

சொற்ற கதோத்காத மென்பர் கவிஞர்"

- பிரவிருத்தகம்

"கால வொப்புமை பற்றி பாத்திரம்

களத்தில் தோன்றல் பிரவிருத் தகமாம்"

- பிரயோகாதிசயம்

"ஈதோ இவன் என்பன போன்ற

சூத்திர தாரேன் சொற்கொண் டரங்கில்

பாத்திரம் தோன்றல் பிரயோக திசயம்"

இவ்வாறாக பாரதி விருத்தியின் இலக்கணங்கள் பற்றி மேற்குறிப்பிட்ட நூல்கள் விளக்கி நிற்கின்றன.

**4.3சாத்வதி விருத்தி**

நியாயங்களுடனும், தகுதி வாய்ந்த மற்ற வியாபாரங்களுடனும் கூடியதாக மகிழ்ச்சியை பெருமளவில் தன்னகத்தே கொண்டு, வருத்தம் துளியும் இன்றையதாக காணப்படும் மனிதனுடைய செயற்பாடானது சாத்வதி விருத்தி எனப்படும்.

சத்துவம் என்றால் ஒளி எனப் பொருள் கொள்ளப்படுகிறது. எனவே ஒளியுடன் கூடியதான தெளிவான மனதில் தோன்றுவது சாத்வதி விருத்தி எனப்படும்.

சத்துவத்துடன் கூடிய உரையாடலில் மனதைச் சார்ந்ததாக காணப்படுகின்ற மெய்ப்பொருள் அதிகமான அளவிலும், சொல் உறுப்புகளின் அசைவுகள் குறைவாகவும் காணப்படும். வீரம், அற்புதம், ரௌத்திரம் ஆகிய சுவைகளில் சாத்வதி விருத்தி பயன்படுத்தப்படுகிறது. இவ்விருத்தியில் ஸ்ருங்காரம், கருணை, வெறுப்பு (பற்றற்ற நிலை) ஆகிய சுவைகள் காணப்பட மாட்டாது. இருந்தாலும் மிகக் குறைவான அளவில் காணப்படும் என குறிப்பிடப்படுகிறது. மிக்க செருக்கினைத் தன்னகத்தே கொண்ட ஆடவர்கள் ஒருவருக்கொருவர் வீரம் செறிந்த உரையாடல்களை மேற்கொள்ளும் போது சாத்வதி விருத்தி பயன்படுத்தப்படுகிறது. சாத்வதி விருத்தியானது நான்கு வகைப்படும். அவை கீழ் வருமாறு,

01. உத்தபாகம்

02. பரிவர்த்தகம்

03. சல்லாபகம்

04. சங்காத்யம்

என்பனவாகும். தொடர்ச்சியாக இவற்றினுடைய விளக்கங்களை காண்போம்.

i. உத்தபாகம்

மனதில் எழுகின்ற போராட்ட உணர்ச்சியை குறிக்கின்ற செயலானது உத்தபாகம் எனப்படுகிறது.

"இதோ நானும் சித்தமாகவே இருக்கின்றேன் வா உன் வலிமையை காட்டு" என்பன போன்ற பிணக்கத்திற்காக தொடங்கும் உரையாடல் உத்தபாகம் எனப்படும்.

*ii.* பரிவர்த்தகம்

மனதில் தோன்றுகின்ற போராட்டத்தின் காரணமாக செய்ய நினைத்த வேலையை விட்டு ஏதேனும் வேறு ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு வேறு ஒரு செயலை செய்தல் பரிவர்த்தகம் எனப்படும்.

*iii.* சல்லாபகம்

மிரட்டலுடன் கூடியதாக அல்லது மிரட்டும் சொற்கள் அல்லாத படி பிறரை மதித்துக் கூறும் உரையாடல் சல்லாபகம் எனப்படும்.

*iஎ.* சங்காத்யம்

சாபம் முதலான உபாய சக்திகளாலோ, பொருள் வலிமையின் காரணமாகவோ, தெய்வச் செயலின் காரணமாகவோ, அல்லது தன் குற்றத்தின் காரணமாகவோ பிணக்கானது முறியடிக்கப்படுதல் சங்காத்யம் எனப்படும். இதற்கான சில எடுத்துக்காட்டுக்கள் கீழ் வருமாறு,

சிகண்டியை முன் வைத்துக் கொண்டு போராட்டத்தினை மேற்கொண்டால் பீஸ்மர் வீழ்த்தப்படுவார் என்ற சாபத்தினை அடிப்படையாகக் கொண்டு பாரதப் போரின் போது யுத்த காலத்தில் சிகண்டியை முன்னிறுத்தி பீஸ்மரை வெற்றி கொள்வதானது சாபத்தினால் வெற்றி கொள்ளுதல் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

என் மகன் இறந்த செய்தி கேட்டால் நான் போர் கருவியை விட்டு விடுவேன் என துரோணர் கூறுவதனை அடிப்படையாகக் கொண்டு அஸ்வத்தாமன் எனும் யானையை வதைத்து விட்டு அஸ்வத்தாமன் இறந்து விட்டான் என்ற செய்தியினை துரோணர் காதில் விழும்படி செய்து துரோணரை வீழ்த்தி வதைப்பது ஆனது மகாவி~;ணுவின் செயலாகும். இதுவே தெய்வச் செயலால் வெற்றி கொள்ளுதல் வெற்றிக் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கரணனோடு; சொற்போர் புரிந்து அஸ்வத்தாமன் போர்க்கருவியை கைவிடுதலானது தன் குற்றத்தால் பகையை நீக்குதலுக்கு சிறப்பான எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறாக சாத்வதி விருத்தியின் இலக்கணமானது நாட்டியசாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மதங்கசூளாமணி எனும் நூலிலே

“சாத்வதியாவது அறம் பொருளாக தெய்வ மானிடர் தலைவராக வருவதுஸஸ”

அதாவது சாத்வதி விருத்தி எனப்படுவது அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருளையும் தன்னகத்தேக் கொண்டது எனவும் தெய்வத் தன்மை பொருந்திய மானிடரை தலைவராக கொண்டது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இதனை விட தசரூபகம் எனும் நூலிலே சாத்வதி விருத்தி பற்றி பின்வருமாறு கூறப்படுகிறது.

> “அருள் மறம் உறுதி நேர்மை யாதி
>
> வருத்தமில் விருத்தி சாத்வதியாம்”

என்ற பாடலடியினூடாக குறிப்பிடப்படுவது யாதெனில் வீரம், அருள், நேர்மை, கொடை முதலிய சீரிய பண்புகளை தன்னகத்தேக் கொண்ட தலைவனின் செயலானது வருத்தம்

துளியுமின்றிக் காணப்படுவது சாத்வதி விருத்தி எனப்படும் என சாத்வதி விருத்தியின் இலக்கணம் கூறப்படுகிறது. மேலும்

"சல்லா பகமென உத்தா பகமென

சங்காத் தியமெனப் பரிவருத் தமென

அதனங் கங்கள் நால்வகை யாகும்"

அதாவது சாத்வதி விருத்தியானது சல்லாபகம், உத்தாபகம், சங்காத்தியம், பரிவருத்தம் என நால்வகை உறுப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது என இந்நூல் மேலும் குறிப்பிடுகின்றது. அவ்வுறுப்புக்களின் இலக்கணம் நாட்டியசாஸ்திரத்தில் குறிப்பிட்டது போலவே குறிப்பிடப்படுகின்றது. அதன் பாடலடிகள் வருமாறு

- சல்லாபகம்

"பல்வகைக் கருத்தும் சுவையும் ஆழமும்

நன்கமை வதாம் சல்லா பகமாம்"

- உத்தாபகம்

"துவங்கிய போதில் ஒருவன் பிறனை

பொருதத் தூண்டல் உத்தா பகமாம்"

- சங்காத்தியம்

"மருளுறச் செய்யும் மந்திரத் தாலும்

பொருள் வலி யாலும் விதிவலி யாலும்

பிரித்தல் சங்காத் தியமா மென்பர்"

- பரிவருத்தகம்

"கருதிய கருமம் குலைய விடுத்துப்

புதியது செய்தல் பரிவருத் தகமாம்"

**4.4கைசிகி விருத்தி**

மேன்மையான ஆடை, மலர்மாலை முதலியவற்றைக் கொண்டதும் சித்திரமும், இசையையும், நடனத்தையும் தன்னகத்தே மிகுதியாகக் கொண்டுள்ளதும், பெண்களால் பயன்படுத்தப் படுவதும், காம போக அனுபவத்தால் தோன்றுவதுமான செயற்பாடு கைசிகி விருத்தி எனப்படும். இக்கைசிகி விருத்தியானது நான்கு வகைப்படும் அவையாவன

01. நர்மம்

02. நர்மஸ்புஞசம்

03. நரமஸ்போடம்

04. நர்மகர்ப்பம்

என்பனவாகும். இவற்றினுடைய இலக்கணங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

- நர்மம்

நர்மம் என்பது காதலுக்குரிய செயலாகக் காணப்படுகிறது. வீரச்சுவையை பிரதிபலித்துக் காட்டாது தெளிவான தூய்மையான செயற்பாட்டுடன் சிருங்கார சுவையை நிறைவுப் பெறச்செய்வதனை நோக்கமாகக் கொண்ட நகைச்சுவையுடன் கூடியதான உரையாடல் நர்மம் எனப்படும். இதில் பயன்படுத்தப்படும் நகையானது மூன்று வகைப்படும். அவை கீழ்வருமாறு

- சினத்தையும், பொறாமையையும் குறிப்பிடுவதான நகை.
- பிறரை குற்றம் சாட்டியோ மறுத்தோ கிண்டலாகவோ உரைப்பது.
- கபடத்துடன் கூடியதாக பிறர் மனதை அறியப் பயன்படுத்தப்படுவது.

காதலனும் காதலியும் தம்முடைய உளப்பாங்கினை (கதையினை) வெளிப்படுத்தும் உரையாடல்களுடனும், பேடத்துடனும் முதன் முதலில் சந்தித்து பின்னர் தலைவனின் முதற் காதலியிடம் கொண்ட அச்சத்தின் காரணமாகப் பிரிந்து செல்லுதல் நர்மஸ்புஞ்சம் எனப்படுகிறது. ஸ்புஞ்சம் என்றால் தடங்கல் எனப் பொருள்படுகின்றது. எனவே காதலுக்கு தடங்கல் விளைவதால் நர்மஸ்புஞ்சம் எனப்படுகின்றது.

- நர்மஸ்போடம்

அச்சம், நகை முதலிய சுவை நன்கு வெளிப்படுகின்ற நிலையின்றி காணப்படும். அதாவது மிக நுட்பமான சினம், நகை முதலியவற்றுடன் கூடியதான விசித்திரமான ஸ்ருங்காரம் நர்மஸ்போடம் எனப்படுகின்றது. ஸம்போடம் என்றால் விசித்திரம் என்று பொருள் அதாவது சிறந்த கருத்து நயத்துடன் கூடிய உரையாடல் சம்போடம் எனப்படும். இதற்கு எடுத்துகாட்டு கீழ்வருமாறு

- சுசங்கதா : யாரைத்தேடி இங்கு வந்தாயோ அவன் இங்கு தான் ஒளிந்திருக்கின்றான்
- சாக்ஸிதை: தோழி நான் யாரை தேடி வந்தேன் என்று எண்ணுகிறாய்

இவ்வாறாக ரத்னாவளி நாடகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது முதலில் தோழி உரைத்ததில் மென்மையான நகையும், சாக்ஸிதை உரைத்ததில் மென்மையான சினமும் மறைப் பொருளாக வெளிப்படுத்தப் படுகிறது.

- நர்மகர்ப்பம்

ஸ்ருங்காரத்திற்குப் பயன்படும் அறிவு, தோற்றம், பொலிவு, செல்வம் முதலான தன்மைகளை ஏதேனும் ஒரு காரணத்தினால் மறைத்துக் கொண்டு தலைவனானவன் மாறுவேடம் பூண்டு செயற்படுதல் நர்மகர்ப்பம் எனப்படுகிறது. இவ்வாறாக கைசிகி விருத்தியின் விளக்கமானது நாட்டியசாஸ்திரத்தில் குறிப்பிடப்படுகிறது. இதனைத் தொடர்ந்து மதங்கசூளாமணி எனும் நூலிலே கைசிகி விருத்திபற்றி பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

“கைசிகியாவது காமம் பொருளாக காமுகராகிய மக்கள் தலைவராக வருவது”

அதாவது காமத்தினை தனது உட்பொருளாகவும், காமத்தினை மிகுதியாக தன்னகத்தேக் கொண்டுள்ள மக்களை தலைவராக கொண்டமைந்தது கைசிகி விருத்தி எனக் கூறப்படுகிறது. மேலும் கைசிகி விருத்திப் பற்றி தசரூபகம் எனும் நூலிலே கூறப்படுகின்ற விடயங்கள் பின்வருமாறு

அவற்றுள் ஆடல் பாடல்வி லாசம்

ஆகிய மென்மைச் செய்கை சிகியாம்.''

"உள்ளக் கருத்தின் சிறு சிறு தோற்றம்

நுல்கிய சிறுசுவை நருமப் போடம்"

- நருமக்கர்ப்பம்

''விருப்பம் பெறுவான் மறைபணி யாற்றல்

நர்ம கர்ப்ப மென்று நவின்றார்''

இவ்வாறாக கைசிகி விருத்தி பற்றிய இலக்கணங்களை மேற்குறிப்பிடப்பட்ட நூல்களில் நூலாசிரியர்கள் வகுத்து தந்துள்ளனர்.

**ஆரபாடி விருத்தி**

வீரர்களின் சினம் போன்ற பல தன்மைகள் பலவகை கபடங்கள், சூழ்ச்சிகள், வஞ்சனைகள், தம்பங்கள், வீண்தற்பெருமைகள், பொய்யுரைகள் முதலியவற்றுடன் வீறு கொண்ட சினம் முதலியவற்றை உணர்த்துவதற்கு பயன்படுத்தப்படுவது ஆரபாடி விருத்தி எனப்படும். இவ்ஆரபாடி விருத்தியானது நான்கு பிரிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு வகையாகப்

01. ஸம்ஸிப்தகம்

02. அவபாதம்

03. வஸ்தூத்தாபனம்

04. ஸம்பேடம்

என்பனவாகும். இவை பற்றிய விளக்கங்கள் கீழ்வருமாறு

- ஸம்ஸிப்தகம்

பொருள் செறிந்த சிற்பங்கள், பெரிய பொம்மைகள், விசித்திரமான நேபத்தியம் முதலியவற்றைக் கொண்டு குறிப்பால் பொருள் உணர்த்துதல் 'ஸம்ஸிப்தகம்' எனப்படும்.

- அவபாதம்

மிக்க மகிழ்ச்சியினாலோ, அச்சத்தின் காரணமாகவோ விரைவாக பாத்திரங்கள் அரங்கத்திற்கு வருவது போவது போல பெருங்குழப்பம் விளைந்தால், அபாயம் நேர்ந்தால் உணர்ச்சி வேகத்துடன் செயலாற்றுதல் ''அவபாதம்'' எனப்படும்.

- வஸ்துத்தாபனம்

பலவகை ஸ்தாயி மெய்ப்பாடுகள் முதலியவற்றின் காரணமாக எல்லாச் சுவைகளையும் சுருக்கமாக அமைத்தல், நெருப்பால் தீங்கு விளைதல் முதலியவற்றாலோ அவை இன்றியோ வரும் பொருளை மனதில் தோன்றச் செய்தல் “வஸ்துத்தாபனம்” எனப்படுகிறது.

- சம்பேடம்

பரபரப்புடன் கூடியதாகவும், பலவைகப்போர், மற்போர், கபடம், சூழ்ச்சி முதலியவற்றுடன் கூடியதாகவும், போர்க்கருவிகளால் அடித்தல் போன்ற செயல்கள் நிரம்பியதாக காணப்படுவது “சம்பேடம்” எனப்படும். இவ்வாறாக ஆரபாடி விருத்தி பற்றி நாட்டியசாஸ்திரத்தில் குறிப்பிடப்படுகிறது. மேலும் மதங்கசூளாமணி எனும் நூலிலே

“அரபாடியாவது பொருள் பொருளாக வீரராகிய மானிடர் தலைவராக வருவது”

என கூறப்படுகிறது. அதாவது போர்க்கருவிகளை மிகுதியாகக் கொண்டதும், வீரம் பொருந்திய மானிடர்களைத் தலைவராகக் கொண்டதும் ஆரபாடி விருத்தி எனப்படும். இதனை விட தசருபகம் நூலில் ஆரபாடி விருத்தி பற்றி குறிப்பிடப்பட்ட விடயங்கள் வருமாறு

“பொருதல் மாயை சாலம் வெகுளி

மயக்கம் முதலாம் செயல்ஆ ரபாடி”

என்ற பாடலடியினூடாக போர், மந்திரத்தின் வலி, கபடம், சூழ்ச்சி, மயக்கம் என்பவற்றைக் கொண்டது ஆரபாடி விருத்தி ஏனப்படும் என விளக்கப்படுகிறது. மேலும் ஆரபாடி விருத்தியின் உறுப்புகள் பற்றி குறிப்பிடப்படுகின்ற பாடலடி வருமாறு

“சஞ்சித் தியெமெனச் சம்பே டமென

வத்துாத் தானம் எனஅவ பாதம்

எனவத னங்கம் நால்வகை ஆகும்”

அதாவது சம்ஸிப்தகம், சம்பேடம், வஸ்துத்தாபனம், அவபாதம் என நால்வகை அங்கங்களை ஆரபாடி விருத்தியானது கொண்டுள்ளது என விவரிக்கப்படுகிறது. தொடர்ந்து ஒவ்வொரு உறுப்புக்களுக்குமான பாடலடிகள் கீழ் வருமாறு

- சஞ்சித்தி

“சிற்பத் திறநூல் ஒருபொரு ளாக்கல்

சஞ்சித் தியமெனச் சிலரும், முந்தைத்

தலைவன் நீங்கிப் பிறதொன் றிடுதல்”

**முடிவுரை**

பாரதி விருத்தி, சாத்வதி விருத்தி, கைசிகி விருத்தி, ஆரபாடி விருத்தி ஆகிய நால்வகை விருத்திகளின் வரன்முறையான நிலைப்பாடுகளும் முறையே தனித்துவம் பெற்றுச் சிறப்பிடம் பெற்று நான்கு இந்திய சாஸ்திரிய நாட்டிய வடிவங்களுடன் இனிதே அரிதே தொடர்புப்படுத்தப்பட்டுள்ளமையை நாம் சில ஆய்வு நூல்களில் காணமுடிகின்றது. குறிப்பாக விருத்தி நிலைப்பாட்டில் காணப்படுகின்ற பாரதி விருத்தியினை அதாவது வார்த்தைகள் மூலம்

அர்த்தம் வெளிப்படுத்தும் நிலைப்பாட்டினை வட இந்திய நடனமாகிய கதக்கிலும், சாத்வதி விருத்தியின் நிலைப்பாட்டினை அதாவது சாத்வீக மனோதர்ம ஆளுமை மேலோங்கிக் காணப்படும் பாங்கினைத் தென்னிந்திய நடனமாகிய பரதத்திலும், அவ்வாறே ஆரபாடி விருத்தியின் நிலையினை கடினமான, கம்பீரமான, எடுப்பான, மிடுக்கான, துள்ளல்கள், திருப்பங்கள், விறுவிறுப்புகள் நிறைந்த கடினமான அம்சங்களை கதகளியிலும், நளினமான, எளிமையான கைசிகி விருத்தியின் அம்சங்களை கிழக்கிந்திய நடனமாகிய மணிப்புரியிலும் முறையே இவ் நான்கு விருத்திகள் மேலோங்கி உள்ளதையும் அவற்றின் தனித்துவப் பாங்கும்,பாணியும் தொடர்புப் படுத்தப்பட்டுள்ளதையும் காணமுடிகின்றது. இப்பொதுப்படை கண்ணோட்டமானது இந்தியக் கலாச்சார சாஸ்திரீய வகை நடனங்கள் நான்கிலும் தனித்துவம் பெற்று மேலோங்கிக் காணப்படுகின்ற அதே வேளையில் பொதுப்படையில் பரதக் கலையில் இந்நான்கு விருத்தியின் நிலைப்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

பரதத்தில் ஒரு விருத்தியின் பயன்பாடு மேலோங்கி காணப்படுகின்ற இடத்து ஏனைய விருத்தியின் நிலைப்பாடுகள் சற்று குறைவான விதத்திலும் பயன்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. ஆனாலும் அவை நான்கும் ஒன்றுடன் ஒன்று நாட்டியத்தில் பின்னிப் பிணைந்துக் காணப்படுவதையும், கையாளப்படுவதையும் அவதானிக்க முடியும். அதாவது வார்த்தைகள் மூலம் பாடல் வரி வடிவங்களில் இடம்பெறும் அர்த்தங்கள் அனைத்தும் அர்த்த பூர்வமாக ஆணித்தரமாக பேச்சினூடாக வெளிப்படுத்துகின்ற பாரதி விருத்தியின் நிலைப்பாட்டினைச் சார்ந்தது எனலாம்.

அவ்வாறே நடனச் சிலை நிலைத் தோற்றங்கள், கடினமான கரண, அங்க கரண, தேசி கரண நிலைப்பாடுகளின் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் நிலமை ஆரபாடி விருத்தி எனவும் கூறப்படுகிறது. சாத்வதி விருத்தியின் நிலைப்பாடானது நாட்டியத்தில் சாத்வீக அபிநயத்தினூடாகவும், உணர்வியல் ரீதியிலும், மனித மனோதர்ம அம்சங்களுடன் ஒன்றிணைந்த வெளிப்படுத்தும் நிலைப்பாடாகும். அத்துடன் வெளிநிலை, களநிலைத் தாக்கங்காளான மேடை அலங்காரம். ஆடை, ஆஹார்யம், ஒப்பனை, ஒளி, ஒலி அம்சங்கள் ஆகிய அத்தனை அம்சங்களும் சாத்வதி விருத்தியின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்த உறுதுணை அளிக்கின்றன எனலாம். அவ்வாறே நாட்டியத்தில் இடம்பெறும் நளின. எளிய நிலைப்பாடுகள் அனைத்தும் கைசிகி விருத்தி என்னும் அம்சத்தில் அடக்கி ஆராயப்படுகின்றது . அந்த வகையில் நாட்டிய நுட்பவியல்சார் நுணுக்கங்களை கருத்திற் கொள்ளும் போது நாம் அடிப்படையில் விருத்தியியல் சார்நிலைப்பாடுகளை கருத்திற் கொள்ளுதல் இன்றியமையாததாகும். வேதங்களில் இருந்து பிரம்மாவால் தோற்றுவிக்கப்பட்டதாக கருதப்படும் நால்வகை விருத்திகளும் நாட்டியத்திற்கும் , நாடகத்திற்கும் மிக இன்றியமையாததொரு விடயமாக காணப்படுகிறது.இவற்றில் பல்வேறு சுவைகளை பார்வையாளர்கள் மகிழும் வண்ணம் அள்ளி வழங்குவது விருத்திகளின் செயற்பாடாகும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

**உசாத்துணை நூல்கள்**


1. இரகுராமன்.சே(2006) - தமிழ் நடன வரலாறு — nஜயந்தி பிரிண்டர்ஸ் சென்னை.

2. கார்த்திகா கணேசர்(1999) — காலந்தோறும் நாட்டியக் கலை—பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு-22

3. சிவகாமி. வி(1998) — தென்னாசிய சாஸ்திரிய நடனங்கள் ஏழாலை , யாழ்ப்பாணம்.

4. சுபா~pனி பத்மநாதன் (2010) பைங்கலை பரதக்கலை — விமலோதயா பரத நாட்டிய மன்றம் கொழும்பு.

5. சுபா~pனி பத்மநாதன்(1998) பைங்கலை பரதக்கலை — விமலோதயா பரத நாட்டிய மன்றம் கொழும்பு.

6. பத்மா சுப்பிரமணியம்(1985) பரதக்கலை கோட்பாடு — வானதி பதிப்பகம் - சென்னை

## Reference Books

1. Rahuraman. S (2006) — Tamil Nadana Varalaru , Jeyarathi Printers, Chennai.
2. Karthiga Ganesar (1999) — Kaalanthorum Natiya kalai, Boobalasingam Book Publishing House, colombo-22.
3. Sivasamy. V (1998) — Thennasiya sastriya nadanagal, Ezhalai, jaffna.
4. Subashini Padmanathan (2010) — Bhainkalai Bharathakkalai, Vimalothaya bharathanatiya Institute
5. Subashini Padmanathan (1998) — Bhainkalai Bharathakkalai, Vimalothaya bharathanatiya Institute
6. Padma Subramaniam (1985) — Bharathakkalai Kodpadu, Vanathi Publications — Chennai.

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com